## நன்றிப்பாடல்

பாட்டுப்பாடி ஆண்டவர்க்கு நன்றி
கூறுங்கள்
காக்கும் நல்ல தேவனவர்
இரக்கமுள்ளவர்
நல்லவரும் வல்லவருமாய் என்றும் அவர்
இருப்பதினாலே (2)

செடியைப் பிரிந்த கொடியைப் போல
நாமெல்லாம்
மடிந்து அழிந்து போயிடாமல்
காத்திடுவாரே (2)
கடலில் தவித்த பேதுருவைப் போலே
நாமும் -2
துன்பம் வந்தால் துயரம் வந்தால்
இயேசுவை அழைப்போம்
நிரந்தரமாய் சந்தோசம் தந்திடுவாரே

வாழ்வு தரும் வார்த்தையெல்லாம்
உம்மிடம்தானே
என்று சொல்லி அவர் பாதம்
பணிந்திடுவோம் நாம் (2)
சுமைசுமந்து சோர்ந்திருப்போர்
விரைந்து வாருங்கள் -2
என்று சொன்ன இயேசுவை நாம்
அணுகிச் செல்லுவோம்
சுகம் தந்து சமாதானம் தந்திடுவாரே

## மரியன்னைப்பாடல்

தாயன்பைத் தேடி வந்தேன் அம்மா
அம்மா
என்னை தயவாய் நீ கண்ணோக்கும்
அம்மா அம்மா (2)
மாமரி உன் துணைதேடி வந்தோரிலே
யாரும் ஏமாறிப் போனகதை
இங்கில்லையே (2)
தாயே தாயே அன்பின் ஆதாரமே
பாதையெல்லாம் அருள் ஒளிகாட்டுமே
வாழ்நாளெல்லாம் நல்ல வழிகாட்டுமே

உடலுள்ளம் நலமில்லை பல நோய்களே
ஊரில் மதம் சாதிவெறி கொண்ட பல
பேய்களே (2)
மடிமீது தவழும் உன் மகன் பேசினார் -
இங்கு
மறையாத நோய்கூட பயந்தோடுமே (2) -
தாயே தாயே

யார் யாரோ துணை என்று நான்
நம்பினேன்
நெஞ்சில் வேறேதோ எண்ணங்கள் நான்
அஞ்சினேன் (2)
இல்லை மனம் அன்னைக்கா
புரியாதென்று - என்
மாதா உன் பாதத்தில் இளைப்பாற்றுமே
(2) - தாயே தாயே

# மாதாந்த திருப்பலிப் பாடல்கள்

### ஆகஸ்ட் 2021

## வருகைப்பாடல்

ஒன்று கூடுவோம் ஒன்றாய்ப் பாடுவோம்
ஆண்டவன் இயேசுவின் பலியில்
இணைவோம் (2)
நம் இறைவனைப் போற்றுவோம்
நம் இயேசுவைப் போற்றுவோம்
தூய ஆவியைப் போற்றுவோம்
திருப்பலியில் கலந்திடுவோம் (2)

1. இரக்கத்தைப் பொழிந்து பாவத்தைப்
போக்கும்
மன்னிப்பு வழிபாடு
இறைவனின் குரலை இதயத்தில்
ஒலிக்கும்
இறைவாக்கு வழிபாடு
இயேசுவின் உடலைக் குருதியை
உணவாய்
உட்கொள்ளும் வழிபாடு
வாழ்வில் ஆனந்தம் மலர்ந்திடச்
செய்யும்
நன்றியின் வழிபாடு - நம் இறைவனை

2. ஆவியில் உண்மையில் இறைவனைத்
தொழுவது
உயிருள்ள வழிபாடு
ஆண்டவர் இயேசுவை மீட்பராய் ஏற்பது
இறைவனின் வெளிப்பாடு
கடவுளைத் தொழுவதும் மனுக்குல
சேவையும்
சமநிலைப் பண்பாடு
இயேசுவின் சீடராய்ச் சான்றுகள்
பகர்வது அழகிய நிலைப்பாடு

## தியானப்பாடல்கள்

தலைமுறை தலைமுறையாக நீரே
எங்களுக்குப் புகலிடம்
இறைவா எம் இறைவா நீரே
எங்களுக்குப் புகலிடம் (2)

மலைகள் தோன்றும் முன்பே
இம்மண்ணும் தோன்றும் முன்பே
காலகாலமாய் இருக்கின்றீர் உம்
கட்டளையின்படி நடத்துகின்றீர்
ஆயிரமாயிரம் ஆண்டுகள் உமக்கு
நேற்றைய தினத்தைப் போலுள்ளது
ஒரு இரவு சாமத்தைப் போன்றுள்ளது
ஆண்டவரே என் ஆண்டவரே உம்
ஊழியன்
என்மீது இரக்கம் வையும் - 2
தேவனே திரும்பி வாரும், என் மீது
இரக்கம் வையும்

காலைதோறும் உம் பேரன்பால்
எங்களுக்கு நிறைவளித்தருளும்
உமது மாட்சிமை விளங்கும் உமது
அருள் எம்மில் தங்கிடுமே
உந்தன் தயவு எம்மில் நிறைந்திடுமே
ஆண்டவரே என் ஆண்டவரே என்
செயல்களில்
எனக்கு ஜெயம் தாரும்

.. ...

## காணிக்கைப் பாடல்

என்னை உன்னில் இணைக்க வந்தேன்
ஏற்றுக்கொள்வாயா
தொடரும் பயணம் பாதம் வைத்தேன்
ஏற்றுக்கொள்வாயா
இறைத் தியாக வாழ்வை நானும் வாழ
அர்ப்பணம் என்னை தருகின்றேன்
ஏற்றுக்கொள்வாயா என் வாழ்க்கைப்
பயணம் முழுவதும்
அருள் புரிவாயா என் இலட்சியப்
பயணம் தொடர்ந்திட

தலைவன் என்னில் வாழும்போது
தனிமை என்னை வாட்டுமோ
தந்தை அன்பில் தழைக்கும்போது
தடைகள் யாதெனை தீண்டுமோ (2)
உலக வாழ்வின் தளைகளே உந்தன்
சாயல் மறுத்து வாழ்கிறேன்
இறைச்சாயல் ஒளிர மாண்பு மிளிர
உந்தன் பாதம் படைக்கின்றேன்

உண்மை வழியில் நடக்கும்போது
உலகம் என்னைத் தூற்றுமோ
உந்தன் உறவில் முழுமைகாண உலக
உறவுகள் மறுக்குமோ (2)
மனிதநேயம் மடிந்தது இன்று இறைமை
மண்ணில் வீழ்ந்தது
உண்மை வழியில் நடக்க உறவில் மலர
உந்தன் பாதம் படைக்கின்றேன்

## திருவிருந்துப்பாடல்

கொண்டாடுவோம் திருவிருந்து நம்மை
ஒன்றாக்கும் ஒற்றுமை விருந்து (2)
நம் தேவ தந்தை தனையன் ஆவி
ஒன்றாக இருப்பதுபோல் இணைந்து

வானகத் தந்தை தரும் வாஞ்சையின்
விருந்து இது - நம்
மீட்பினைப் புதுப்பிக்குமே ஆவியில்
உயிர்ப்பிக்குமே (2)
நம் தந்தை அவரே உரிமை மைந்தர்
நாம்
எல்லோரும் சோதரர் என்றாகுவோம்

புலர்ந்திடும் புது உலகின் நலம் தரும்
விருந்து - இது
நம் பார்வையை விரிவாக்கும்
பாதையை தெளிவாக்கும் (2)
நாம் யாவரும் இயேசுவின்
சொந்தங்களே
அவருடன் எல்லாம் அங்கங்களே
சுரங்களின் சங்கமமே சுந்தர
இசையாகும் - நம்

கரங்களின் சங்கமமே அன்பின்
பிறப்பாகும் (2)
அந்த வரந்தரும் இயேசுவின் பந்தியிலே
வாருங்களே ஒன்று சேருங்களே